தமிழ்நாடு அரசு

# அருள்மிகு பட்டீசுவரசுவாமி திருக்கோயில்

## பேரூர், கோவை மாவட்டம்

## வேலைவாய்ப்பு விண்ணப்பம் கோரும் அறிவிப்பு

கோவை மாவட்டம், பேரூர் வட்டம், பேரூர் அருள்மிகு பட்டீசுவரசுவாமி திருக்கோயிலில் கீழ்க்கண்ட விவரப்படியான காலிப்பணியிடங்களுக்கு தகுதியுள்ள இந்து சமயத்தைச் சார்ந்த நபர்களிடமிருந்து 28.06.2022 அன்று மாலை 05.45 மணிக்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. அதற்குப்பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இதர விவரங்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் வந்து கேட்டுத் தெரிந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

| வ. எண். | பதவியின் பெயர் | பணியிடம் எண்ணிக்கை | சம்பள விகிதம் | தகுதி |
|---|---|---|---|---|
| 1 | **வழக்கு எழுத்தர்** | **1** | Level 22<br>18500 - 58600 | **பதவி தரம் VI அரசு விதிகள்**<br>பத்தாம் வகுப்பு தேர்ச்சி அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு இணையான கல்வித் தகுதி பெற்றிருத்தல் வேண்டும். |
| 2 | **சீட்டு விற்பனை எழுத்தர்** | **1** | Level 22<br>18500 - 58600 | **பதவி தரம் VI அரசு விதிகள்**<br>பத்தாம் வகுப்பு தேர்ச்சி அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு இணையான கல்வித் தகுதி பெற்றிருத்தல் வேண்டும். |
| 3 | **காவலர்** | **1** | Level 17<br>15900 - 50400 | **பதவி தரம் XII அரசு விதிகள்**<br>தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும். |
| 4 | **துப்புரவு பணியாளர் (பெருக்குபவர்)** | **3** | Level 10<br>10000 - 31500 | **பதவி தரம் XIII அரசு விதிகள்**<br>தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும். |
| 5 | **கால்நடை பராமரிப்பு** | **1** | Level 10<br>10000 - 31500 | **பதவி தரம் XIII அரசு விதிகள்**<br>தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும். |
| 6 | **காவலர் (தொகுப்பூதியம்)** | **3** | தொகுப்பூதியம்<br>ரூ. 6000/- | **பதவி தரம் XIII அரசு விதிகள்**<br>தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும். |
| 7 | **திருமஞ்சனம்** | **2** | Level 17<br>15900 - 50400 | **பதவி தரம் XXVI அரசு விதிகள்**<br>தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும். அரசு நிறுவனங்கள் அல்லது ஏனைய யாதொரு நிறுவனத்தால் நடத்தப்படும் ஆகமங்களுக்கு அல்லது வேத பாட சாலையில் தொடர்ந்து ஓராண்டு படித்திருக்க வேண்டும். மேற்கண்டதற்கான சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |
| 8 | **உதவி யானைப்பாகன்** | **1** | Level 12<br>11600 - 36800 | **பதவி தரம் XXIIIX அரசு விதிகள்**<br>தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும் மற்றும் யானைக்கு பயிற்சி அளித்து கட்டுப்படுத்தி வழிநடத்தும் திறனுடன் யானைக்கு கட்டளையிட்டு கட்டுப்படுத்துவதற்கான மொழியைப் பேசும் திறனும் பெற்றிருக்க வேண்டும். |
| | **மொத்தம்** | **13** | | |

### நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரர் 01.07.2021 அன்று 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும் 35 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
2. இந்து மதத்தைச் சார்ந்தவராகவும், தமிழ்நாட்டை சார்ந்தவராகவும் இருக்க வேண்டும்.
3. விண்ணப்பதாரர் நல்லதேக ஆரோக்கியம் உள்ளவராக இருக்க வேண்டும். தொற்றுநோய் உடல் அல்லது மனநிலை குன்றிய குறைபாடுகள் உள்ளவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.
4. (i) நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவர்கள்
   (ii) பட்ட கடனை தீர்க்க முடியாதவர்கள் என நீதிமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டவர்கள்
   (iii) அரசுப்பணிகள், பொது ஸ்தாபனங்கள் மற்றும் இதர திருக்கோயில்களில் பணிபுரிந்து தண்டனை காரணமாக பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள்.
   (iv) திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள்.
   (v) இத்துறைக்கு நிலுவைத்தொகை செலுத்தவேண்டியவர்கள் ஆகியோர்கள் மேற்படி பணிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.
5. நன்னடத்தை உடையவராக இருக்க வேண்டும். இதற்கு அரசிதழ் பதிவு பெற்ற அரசு உயர்திகாரியிடமிருந்து பெறப்பட்ட நன்னடத்தைச் சான்று பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.
6. இந்த வேலை வாய்ப்பு அறிவிப்பு வெளியிடும் தேதிக்கு முன்னதாக வரப்பெற்ற விண்ணப்பங்களும் 28.06.2022–ம் தேதி மாலை 5.45 மணிக்குப் பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
7. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவிக்கும் அந்தந்த பதவிக்குரிய கல்வி மற்றும் இதர தகுதி சான்றுகள் மற்றும் இதர விபரங்களுடன் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.
8. விண்ணப்பம் அனுப்பப்படும் மேலுறையின் மீது கண்டிப்பாக பதவியின் பெயர் குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும்.
9. வரப்பெற்ற விண்ணப்பங்கள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டு தகுதியுள்ள நபர்களுக்கு மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அறிவிப்பு அனுப்பப்படும்.
10. நேரடி நியமனம் இந்து சமய அறநிலையத்துறை சட்டவிதிகளுக்குட்பட்டவை.
11. விண்ணப்பங்களுடன் அனுப்பப்படும் அனைத்தும் சான்றிதழ்களும் அரசு பதிவு பெற்ற அலுவலர் சான்றொப்பம் பெறப்பட்ட புகைப்பட நகல்களாக மட்டுமே இருக்க வேண்டும். அசல் சான்றிதழ்களை அனுப்பக் கூடாது.
12. ராஜீஹத்தாலும், தெய்வீகத்தாலும் ஏற்படும் மாற்றங்களுக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.
13. இத்திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை ரூ. 100/– செலுத்தி விண்ணப்ப படிவம் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.
14. விண்ணப்பதாரர் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

**உதவி ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு பட்டீசுவரசுவாமி திருக்கோயில்,**
**பேரூர், பேரூர் வட்டம், கோவை மாவட்டம் – 641010.**

**திருமதி. செ.வ. ஹர்சினி, பி.எஸ்சி., பி.எல்.,**
**தக்கார்/ துணை ஆணையர்/ செயல் அலுவலர்**

**திருமதி. கா.விமலா, எம்.ஏ., பி.எல்.,**
**உதவி ஆணையர் / செயல் அலுவலர்**

வெ.ஆ.எண். 383 /வரைகலை/2022/செ.ம.தொ.அ/ கோவை /நாள் : 27.06.2022

" சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"